# படிப்பு உதவிகள்

# எருசலேம் பட்டணம்


அந்தோனியா
கோட்டை
பெண்களின்
முற்றம் மற்றும்
பொக்கிஷ அறை
தேவாலயம்
புறஜாதியாரின்
முற்றம்
ஏரோதுவின்
அரண்மனை
தண்ணீர்
வாசல்
ஒலிவ
மலை
கீயோன்
நீரூற்று
பெத்தானியா
சீலோவாம்
குளம்
கீதரோன் ஆறு
இன்னோம் பள்ளத்தாக்கு

# இயேசுவின் ஊழியத்தின்போது பலஸ்தீனம்



# பலஸ்தீனத்தின் எல்லாப் பகுதிகளிலும் இயேசுவின் முடிவு ஊழியம்

*பலஸ்தீனத்தின் எல்லாப் பகுதிகளிலும் இயேசுவின் முடிவு ஊழியம் - கூடாரங்களின் பண்டிகையில் இருந்து இயேசு சிலுவையில் அறையப்பட்ட பஸ்கா வரை - சுமார் ஆறு மாதங்களாக நடைபெற்றது. இந்த ஆறு மாதங்களில், கிறிஸ்து பலஸ்தீன நாடு முழுவதிலும் (விசேஷமாக அதன் தென்பகுதியில்) பயணம் செய்தார், ஆனால் அவர் அவ்வப்போது எருசலேமுக்குத் திரும்பினார். இந்தக் கால வேளையை இரண்டு பகுதி களாகப் பிரிக்க முடியும்: யூதேயாவில் பிந்திய ஊழியம் மற்றும் பெரேயா வில் ஊழியம். யூதேயாவில் பிந்திய ஊழியத்தின்போது எருசலேமில் நடந்தவற்றை யோவான் கூறுகையில், லூக்கா சுவிசேஷம் பெரேயாவில் அவரது ஊழியத்திற்கான நமது அடிப்படை ஆதாரமூலமாக இருக்கிறது.*

*இந்தக் காலவேளையின் நாள் வரிசை அட்டவணையைத் தயாரிப்பது அவ்வளவு சுலபமாக இருப்பதில்லை. அதைச் செய்வதற்கான ஒரு வழிமுறை பின்வருமாறு: இயேசு எருசலேமுக்குச் சென்ற மூன்று வேளைகளை லூக்கா குறிப்பிடுகின்றார் (லூக். 9:51; 13:22; 17:11). மூன்று பண்டிகைகளைப் பற்றி யோவான் கூறுகின்றார்: கூடாரங்களின் பண்டிகை, இந்தப் பண்டிகையு டன் தான் இந்தக் காலவேளை தொடங்குகிறது (யோவா. 7:2); இந்தக் காலவேளையின் மத்தியில் வந்த, தேவாலயப் பிரதிஷ்டைப் பண்டிகை (யோவா. 10:22); மற்றும் முடிவில் வந்த பஸ்கா பண்டிகை (யோவா. 12:1). லூக்கா குறிப்பிடுகிற எருசலேம் பயணங்களுக்குள் நாம் யோவான் குறிப்பிடுகிற மூன்று பண்டிகைகளையும் உட்செருக முடியும். இது இந்தப் பாடக் கருத்துக்களை ஒழுங்கமைப்பதற்கு ஒரு வசதியான வழிமுறையாக உள்ளது, ஆனால் மிகச் சரியான நாள்வரிசை அட்டவணை, சார்பளவில் முக்கியத்துவமற்றது என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் பாடக்கருத்துக்களை ஒரு நாட்காட்டியின்படி இல்லாமல், ஒரு நோக்கத்தின்படியே ஒழுங்கமைத்தார்கள்: இயேசுவின்மீது விசுவாசத்தை ஏற்படுத்துதல் (யோவா. 20:31ஐக் காணவும்).*

# இயேசுவின் உவமைகள்[1]

| | மத்தேயு | மாற்கு | லூக்கா | கூறப்பட்டுள்ள "கிறிஸ்துவின் வாழ்வு" புத்தக எண் |
|---|---|---|---|---|
| மரக்காலின் கீழ் விளக்கு | *5:14, 15* | *4:21, 22* | *8:16; 11:33* | *2* |
| வளருகிற விதை | | *4:26-29* | | *3* |
| ஞானமான & மதியீனமான வீடுகட்டுபவர்கள் | *7:24-27* | | *6:47-49* | *2* |
| பழைய உடையில் புதிய துணி | *9:16* | *2:21* | *5:36* | *3* |
| பழைய துருத்திகளில் புதிய திராட்ச ரசம் | *9:17* | *2:22* | *5:37, 38* | *3* |
| கடனை மன்னித்த கடன்கொடுத்தவர் | | | *7:41-43* | *3* |
| விதைப்பவன் மற்றும் நிலங்கள் | *13:3-8, 18-23* | *4:3-8, 14-20* | *8:5-8, 11-15* | *3* |
| கோதுமையின் மத்தியில் களைகள் | *13:24-30, 36-43* | | | *3* |
| கடுகு விதை | *13:31, 32* | *4:30-32* | *13:18, 19* | *3* |
| புளித்த மா | *13:33* | | *13:20, 21* | *3* |
| மறைந்துள்ள புதையல் | *13:44* | | | *3* |
| விலையேறப் பெற்ற முத்து | *13:45, 46* | | | *3* |
| மீன்பிடிக்கும் வலை | *13:47-50* | | | *3* |
| பழைய மற்றும் புதிய விஷயங்கள் | *13:52* | | | *4* |
| காணாமற்போன ஆடு | *18:12-14* | | *15:4-7* | *4* |
| இரக்கமற்ற வேலைக்காரன் | *18:23-34* | | | *4* |
| திராட்சத் தோட்டத்தில் வேலையாட்கள் | *20:1-16* | | | *5* |
| இரண்டு மகன்கள் | *21:28-32* | | | *5* |
| பொல்லாத திராட்சத் தோட்டக்காரர்கள் | *21:33-44* | *12:1-11* | *20:9-18* | *5* |

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு திருமண விருந்து | *22:2-14* | | | *5* |
| அத்தி மரம் | *24:32-35* | *13:28, 29* | *21:29-31* | *6* |
| உண்மை & கூருணர்வு கொண்ட அடிமை | *24:45-51* | | *12:42-48* | *6* |
| பத்து கன்னிகைகள் | *25:1-13* | | | *6* |
| அடிமைகள் & தாலந்துகள் (மினாக்கள்) | *25:14-30* | | *19:12-27* | *6* |
| செம்மறி ஆடுகள் & வெள்ளாடுகள் | *25:31-46* | | | *6* |
| கவனமான வேலைக்காரர்கள் | | *13:35-37* | *12:35-40* | *6* |
| நல்ல சமாரியன் | | | *10:30-37* | *4* |
| தேவையில் உதவும் நண்பர் | | | *11:5-8* | *4* |
| பணக்கார மதியீனன் | | | *12:16-21* | *4* |
| கனி தராத அத்திமரம் | | | *13:6-9* | *4* |
| விருந்துகளில் அமர்விடங்கள் | | | *14:7-14* | *4* |
| அவமதிக்கப்பட்ட அழைப்பு | | | *14:16-24* | *4* |
| விலையைக் கணக்கிடுதல் | | | *14:28-33* | *4* |
| காணாமற்போன காசு | | | *15:8-10* | *4* |
| காணாமற்போன (ஊதாரி) மகன் | | | *15:11-32* | *4* |
| நேர்மையற்ற உக்கிராணக்காரர் | | | *16:1-8* | *4* |
| ஒரு எஜமானர் & அவரது வேலையாள் | | | *17:7-10* | *5* |
| விடாமுயற்சியுள்ள விதவை | | | *18:2-8* | *5* |
| பரிசேயரும் ஆயக்காரரும் | | | *18:10-14* | *5* |

---

குறிப்பு

[1]இந்தப் பட்டியலானது இயேசுவால் பயன்படுத்தப்பட்ட சித்தரிப்பு, அடையாளம், பேச்சுருவம் மற்றும் பழமொழி ஆகிய ஒவ்வொன்றையும் உள்ளடக்காமல் இருக்கையில், இது உவமைகள் என்று பெரும்பாலும் வகைப் படுத்தப்படுகிற அவரது கூற்றுக்கள் மற்றும் கதைகளை உள்ளடக்கியிருக்கிறது

# சீலோவாம் குளம்

## ஹியுகோ மெக்கார்டு

*1971ம் ஆண்டு மே மாதத்தில், நான் இருளான ஒரு நீர்க்குகை வழியே இடுப்பளவுத் தண்ணீரில் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தேன். இந்தத் தண்ணீரானது ஒபேல் மலையின் கிழக்குப் பகுதியில் அதன் அடிவாரத்தி லிருந்து புறப்பட்ட ஒரு ஊற்றிலிருந்து உற்பத்தியான "கீயோன் என்னும் ஆற்றிலிருந்து" (2 நாளா. 32:30) வந்து கொண்டிருந்தது. ஒபேல் மலையின் மேற்குப் பகுதியில் நான் வெளியேற வேண்டிய வழி இருந்தது, அங்குதான் சீலோவாம் குளம் இருந்தது. நான் எனது தங்கும் விடுதியறைக்கு திரும்பி வந்தபோது, தண்ணீரில் ஊறி நனைந்திருந்தேன், ஆனால் எனக்கு மெய்சிலிர்ப்பாக இருந்தது!*

## எசேக்கியாவும் சீலோவாம் குளமும்

*ஆகாசின் குமாரனான எசேக்கியா யூதாவின் அரசராக கி.மு. 727 முதல் 698 வரை இருபத்தி ஒன்பது ஆண்டுகள் ஆட்சி செய்தார் (2 இரா. 18:1, 2). "கீயோன்" என்று அழைக்கப்பட்ட ஊற்று எருசலேம் நகருக்கு வெளியே இருந்தது, அந்த ஊற்றின் தண்ணீர் எருசலேமை எதிரிகள் தாக்கும் வேளை யில் நகருக்கு உள்ளே இருக்க வேண்டும் என்று எசேக்கியா விரும்பினார். "அசீரியா ராஜாக்கள் வந்து, அதிகத் தண்ணீரைக் கண்டுபிடிப்பானேன்" என்று எசேக்கியா அரசரும் மக்களும் கேட்டார்கள் (2 நாளா. 32:4ஆ).*

*எசேக்கியா "ஒரு குளத்தையும் சாலகத்தையும் உண்டாக்கினதினாலே தண்ணீரை நகரத்திற்குள்ளே வரப்பண்ணி[னார்]" என்ற ஒரு குறிப்பை நாம் 2 இரா. 20:20ல் காண்கின்றோம். ஐயத்திற்கிடமான ஆதாரமூலம் ஒன்று, எசேக்கியா "தமது நகரத்தைச் சுற்றிலும் கோட்டை எழுப்பி, இரும்பைக் கொண்டு பாறையைத் தோண்டி, தண்ணீருக்குக் கிணறு ஒன்றை ஏற்படுத்தியதன் மூலம், நகரின் மத்தியில் தண்ணீரைக் கொண்டு வந்தார்" என்று கூறுகிறது* (Ecclesiasticus 48:19). *அவரது வேலைக்காரர்கள், இரும்புக் கருவிகளைக் கொண்டு, சுண்ணாம்புக் கல்லில் இருந்து ஒபேல் மலை நெடுகிலும் ஒரு குகையைக் குடைந்தார்கள். பின்பு அவர்கள், "கீயோன் என்னும் ஆற்றிலே அணைகட்டி" (2 நாளா. 32:30), "தண்ணீரை நகரத்திற் குள்ளே வரப்பண்ணி[னார்கள்]" (2 இரா. 20:20). அங்கு அந்தத் தண்ணீர் சீலோவாம் குளம் என்ற அணையாகத் தேக்கப்பட்டது.*

*சீலோவாம் குளத்தை வடிவமைத்தல் பற்றிய மேற்கூறப்பட்ட பதிவேடானது, பழைய ஏற்பாட்டிலும்* Ecclesiasticus *என்ற புத்தகத்திலும் தெளிவாக இருப்பினும், சுமார் 2,500 ஆண்டுகள் வரை, உலக வரலாற்றாளர் களால் குறிப்பிடப்படாது இருந்தது. இருப்பினும் 1880ல், குளத்தின் அருகே விளையாடிக் கொண்டிருந்த ஒரு அரபுப் பையன், அதன் வடபுறத்தில் ஒபேல் மலையில் ஒரு திறவையைக் கவனித்தான். தண்ணீர்க் குகை பற்றிய*

*அவனது செய்தி பரவிற்று, அது கல்வியாளர்களைக் கைவிளக்குகளுடன் அங்கு கொண்டு வந்து சேர்த்தது, அவர்கள் விரைவிலேயே குகைச் சுவற்றில் எழுத்துக்களைக் கண்டுபிடித்தார்கள். அவர்கள் அமிலம் கொண்டு அந்த எழுத்துக்களைச் சுத்தம் செய்து, பிழிவுகளை ஏற்படுத்தினார்கள். கல்வித் துவம் வாய்ந்த கண்கள் விரைவிலேயே, கி.மு. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த எபிரெய எழுத்துக்களை அதில் கண்டு ஆச்சரியம் அடைந்தன. இது எசேக்கியா இராஜா, ''தண்ணீரை மேற்கேயிருந்து தாழத் தாவீதின் நகரத்திற்கு நேராகத் திருப்பி''யிருந்த (2 நாளா. 32:30) நீர்க்குழாய், நீர்த் தாரை என்று அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.*

*நீர்க்குகையின் சுவற்றில் "துரப்பணம் செய்த நாளில் ... ஆயிரத்து இருநூறு கனஅடிகள் தண்ணீர் குளத்திற்குப் பாய்ந்தோடி வந்தது" என்று கண்களால் கண்ட, உணர்வெழுச்சிமிக்க சாட்சி ஒருவர் எழுதியிருந்தார் என்பது உறுதி.*[1]

*சீயோன் ஆற்றிலிருந்து நீர்க்குகை வழியாக சீலோவாம் குளத்திற்கு நடந்து வருதல் என்பது பார்வையாளர்களிடத்தில், வேதாகமத்தின் மிகச் சரியான தன்மை பற்றிய உறுதிப்பாட்டை விட்டுச் செல்கிறது.*

## இயேசுவும் சீலோவாம் குளமும்

*இந்த நாள் வரையிலும், எருசலேமுக்குப் பயணம் செல்கின்றவர் களுக்கு சீலோவாம் குளம் காண்பிக்கப்படுகிறது. ஒருமுறை இயேசு, சேற்றுப்பட்டியொன்றை பிறவியிலேயே பார்வையற்று இருந்த மனிதர் ஒருவரின் கண்களில் பரப்பி, "நீ போய் ஸீலோவாம் குளத்திலே கழுவு" என்று கூறினார் (யோவா. 9:7அ). அந்தப் பார்வையற்ற மனிதர் எப்படியோ அந்தக் குளத்தைக் கண்டறிந்தார். அவர் தமது கண்களைக் கழுவினார், பின்பு "பார்வையடைந்தவனாய்த் திரும்பி வந்தான்" (யோவா. 9:7).*

*அந்தப் பார்வையற்ற மனிதர் காணமுடியும்படி செய்வதற்கு அந்தத் தண்ணீரில் வல்லமை ஏதோ இருந்தது என்று எவரொருவரும் நினைப்ப தில்லை. அதுபோலவே, பாவங்களைக் கழுவுவதற்கு ஞானஸ்நானம் பெறும் தண்ணீரில் வல்லமை எதுவும் இருப்பதில்லை. தண்ணீருக்கு அப்படிப்பட்ட வல்லமை ஏதாவது இருக்குமென்றால், இயேசு தமது இரத்தத்தினாலே பாவங்களைக் கழுவும்படிக்கு மரித்தது மதியீனமானதாக இருக்கும் (மத். 26:28; வெளி. 7:14).*

*பார்வையற்ற மனிதர் தமது கண்களை சீலோவாம் குளத்தின் தண்ணீரினால் கழுவுவதற்கு மறுத்திருந்தால், அவர் பார்வையற்றவராகவே இருந்திருப்பார். அதுபோலவே, "பிரதான பாவி" என்று தம்மை அழைத்துக் கொண்ட பவுல், ஞானஸ்நானம் பெற்று "தமது பாவங்கள் போகக் கழுவப்படுவதற்கு" (1 தீமோ. 1:15; அப். 22:16) மறுத்திருந்தால், அவர் குற்றமுள்ளவராகவே இருந்திருப்பார்.*[2]

*தழுவப்பட்டது*

குறிப்புகள்

[1]J. McKee Adams, *Ancient Records and the Bible* (Nashville: Broadman Press, 1947), 203. According to Adams, the "actual measured distance is 1,740 feet." [2]Much of this information appeared in Hugo McCord, *Bible Lands & Sacred History* (Nashville: 20th Century Christian, n.d.), 19-21.

# இயேசுவும் நமது ஜெப வாழ்வுகளும்

இயேசு, ஜெபத்தின் மனிதராக இருந்தார். அடிக்கடி அவர் அதிகாலையில் எழுந்து, மற்றவர்கள் தூங்குகையில் ஜெபித்தார். அவர் நாள் முழுவதும் ஊக்கத்துடனும் விடாமுயற்சியுடனும் ஜெபித்தார். குறைந்தது ஒரு சந்தர்ப்பத்திலாவது, அவர் இரவு முழுவதையும் ஜெபத்தில் செலவிட்டிருந்தார். அவரது பெரும்பான்மையான நேரத்தை அதிகமாய் வேண்டிக்கேட்ட பெருங்கூட்டத்தால் அவர் சூழப்பட்டிருந்தும்கூட, இயேசு ஜெபிப்பதற்கு எப்போதும் நேரத்தைக் கண்டறிந்தார். ஜெபித்தல் என்ற மதிப்புமிக்க சிலாக்கியத்தை அவர் ஒருக்காலும் புறக்கணித்ததில்லை, நாமும் புறக்கணிக்கலாகாது. எல்லா விஷயங்களிலும் இருப்பது போன்றே, இதிலும் இயேசு நமக்கு ஒரு உதாரணத்தை விட்டுச் சென்றுள்ளார்.

இயேசுவின் வாழ்வில் நடந்த மாபெரும் நிகழ்ச்சிகள் யாவும் ஜெபத்துடன் இணைந்திருந்தன. யோவானால் அவர் ஞானஸ்நானப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அவர் தமது வெளியரங்கமான ஊழியத்தைத் தொடங்குகையில் அவர் ஜெபித்தார். தமது பன்னிரு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தல் என்ற முக்கியமான முடிவை மேற்கொள்வதற்கு முன்பு அவர், "இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்" (லூக். 6:12). பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரால் காணப்பட்ட அவரது மறுரூபமாகுதலுக்கு முன்பும் ஜெபித்தல் இருந்தது. அவர் ஜெபம்பண்ணுகையில் "அவருடைய முகரூபம் மாறிற்று; அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது" (லூக். 9:29). வனாந்தரத்தில் அவர் சாத்தானால் சோதிக்கப்பட்டது, தேவகோபம் என்ற முழுமையான பாத்திரத்தை பானம்பண்ணுவது என்ற தோட்டத்தில் அவர் மேற்கொண்ட பெரும் துன்பம் நிறைந்த முடிவு, பொல்லாத, கொடியவர்களின் கைகளினால் அவர் சிலுவையில் அறையப்பட்டது - இந்த சோதனைகள் எல்லாவற்றையும் அவர் விசுவாசித்தல் மற்றும் நம்புதல் என்ற பெலப்படுத்தும் வல்லமையான ஜெபத்துடன் சகித்துக் கொண்டார்.

கிறிஸ்து ஜெபத்தை செயல்முறைப்படுத்தியது போலவே, ஜெபத்தைப் பற்றி அவர் தமது சீஷர்களுக்கும் போதித்தார். அவர்கள் விசுவாசத்துடன் விடாது, தேவன் தமது சித்தத்தின்படியான அவர்களின் வேண்டுகோளுக்குப் பதில் அளிப்பார் என்று விசுவாசித்து ஜெபிக்கும்படி அவர் போதித்தார். அவர்கள் முறைப்படியும் ஊக்கத்துடனும், எதிர்பார்ப்பின்

தெளிவான கருத்துணர்வுடனும் ஜெபிக்கும்படி அவர் போதித்தார். கிறிஸ்துவுடனான நமது ஐக்கியம் உண்மையானதாகவும் கனிநிறைந்ததாக வும் இருக்க வேண்டும் என்றால், அவரைப் போன்று நாமும் ஜெபத்தின் செயல்முறைக்கு நம்மை முழுமையாக ஒப்புக்கொடுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். "ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கப் போதித்தருளும்" என்பது நமது இருதயத்தில் ஒழியாத விருப்பமாக இருக்க வேண்டும்.

கிறிஸ்துவை நன்கு அறிய வந்துள்ள நிலையில், நாம் ஜெபத்தில் அவரைத் தவிர்க்க இயலாத கூட்டாளியாக்கிக் கொள்வோமாக. அவர் தமது சொந்த வார்த்தைகளிலேயே, "... என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று விளக்கப்படுத்தியுள்ளார் (யோவா. 15:5). கிறிஸ்து கல்வாரியில் மரித்து, நமக்குள் வாசமாயிருக்கும்படி, மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்து வந்தார். இவ்வாறு அவர், தம்முடன் நாம் என்றென்றைக்கும் வாழும்படி நமது சரீரங்களின் பாவம் நிறைந்த செய்கைகளை மரணத்துக்குள்ளாக்க நமக்கு உதவுகின்றார். அவர் நமது இரட்சகராக இருக்கின்றார், மன்னிப்புக்கான ஜெபம் மற்றும் மன்னித்தலில் பதில் அளிக்கப்படுதல் ஆகியவற்றிற்கு அவரே நமது ஒரே ஒரு நம்பிக்கை யாக இருக்கின்றார். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிலுவை யில் சிந்தப்பட்ட பாவமற்ற இரத்தமின்றி, நமது பாவங்களில் இருந்து நம்மை சுத்திகரித்தலுக்கான நமது வேண்டுகோள்கள் யாவும் வீணானவை களாயிருக்கும். "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; ... இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" என்பதால் (1 யோவா. 1:7) தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

மன்னிப்பிற்காகத் தேவனிடத்தில் கேட்கத் தேவையின்றி ஒரு நாளாவது கடந்து செல்லுவதில்லை. எனது இரட்சகர் இப்படிப்பட்ட மன்னிப்பைச் சாத்தியமாக்கியுள்ளார் என்று அறிவது எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது!

என்றென்றும் வாழ்ந்துகொண்டு தேவனுடைய கிருபாசனத்துக்கு முன்பாக நமக்காக எப்போதும் வேண்டுதல் செய்கின்ற பிரதான ஆசாரியராக இயேசு விளங்குகின்றார் (எபி. 7:25). நமக்காக வேண்டுதல் செய்யும் கிறிஸ்துவின் ஆசாரியத்துவ வேண்டுதல்கள் மூலமாக நாம் கிருபாசனத்தை அணுகும்போது, அவர் நமது தேவை ஒவ்வொன்றையும் அறிகின்றார் மற்றும் நமது இயலாமைகளின் உணர்வினால் அவர் ஆழமாகத் தொடப்படுகின்றார் (எபி. 4:14-16). நீங்களும் நானும் அனுபவிக்கின்ற அதே மாம்ச பலவீனங்களைக் கிறிஸ்துவும் அனுபவித்துள்ளார். அவர் நமது இரட்சகராயிருப்பதற்குத் தகுதிப்படும் பொருட்டு அவர் தமது பலவீனங் களுக்குத் தம்மை விட்டுக்கொடுக்க மறுத்துவிட்டார் என்பதுதான் அவருக்கும் நமக்கும் இடையில் உள்ள வித்தியாசமாக உள்ளது.

சோதனைக்காரனின் வல்லமையை எதிர்த்து நிற்பதில் நமது போராட்டத்தின் சிரமத்தை கிறிஸ்து புரிந்திருக்கின்றாரா? ஆம், ஏனெனில் நாம் சோதிக்கப்படுகின்ற அதே வழிகளில் அவரும் சோதிக்கப்பட்டார், ஆயினும் பாவமற்றவராக இருக்கின்றார். நாம் இடறுகின்றபோது மற்றும்

விழுகின்றபோது, அவர் [நம்மீது] பரிவிரக்கம் கொள்ளுகின்றாரா? ஆம், அதனால்தான் அவர், நமது தேவையின் வேளைகளில் உதவி பெறுவதற்குக் கிருபாசனத்தின் முன்பாக தைரியமாக வரும்படி நம்மை அழைக்கின்றார்.

நமக்காக இயேசுவின் மென்மையான கவனித்தலை அழகுமிகுந்த ஒரு பாடலின் பின்வரும் வரிகள் விவரிக்கின்றன:

பரிவிரக்கம் உள்ள இயேசு என்ற
மாபெரும் வைத்தியர், இப்போது அருகில் உள்ளார்;
தொய்ந்த இருதயத்தைக் களிப்பூட்ட அவர் பேசுகின்றார்;
ஓ, இயேசுவின் குரலைக் கேளுங்கள்.[1]

உங்கள் பலவீனங்களில் இயேசுவைக் கண்ணோக்குங்கள், அவர் தமது ஆவியின் வல்லமையின் மூலமாக உங்கள் உள்ளான மனிதனைப் பலப் படுத்துவார் (எபே. 3:16ஆ). "மனுஷருக்கு நேரிடுகிற சோதனையே யல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மை யுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப் படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடேகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (1 கொரி. 10:13). நமக்காகப் பரிந்துபேசுகிற இயேசு கிறிஸ்து (ரோமர் 8:34), நமது ஒவ்வொரு பலவீனத்தையும் அறிகின்றார், நாம் விழுந்துபோகத் தேவையில்லாதபடி அவர் நமக்கு உதவிசெய்ய மனதாயிருக்கின்றார்.

அவரது நாமத்தினாலே, நாம் ஒரே ஆவியினால் தேவனிடத்தில் சேரும் வழியானது நமக்கு அருளப்பட்டிருக்கிறது (எபே. 2:18). நமது கர்த்தர் நம்மை, அவரது நாமத்தில் பிதாவிடத்தில் ஜெபிக்கும்படி குறிப்பாக நமக்கு அறிவுறுத்தியுள்ளார், நம் ஜெபங்கள் கேட்கப்பட வேண்டுமென்றால், நாம் இதைச் செய்ய வேண்டும். "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர் களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" (யோவா. 14:13, 14); "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்" (யோவா. 16:23ஆ).

"கிறிஸ்துவின் நாமத்தில்" ஜெபித்தல் என்பது, நமது சொந்த "ஆமென்!" என்பதைச் சேர்ப்பதற்கு முன் இந்தச் சொற்றொடரை ஜெபத்தின் முடிவில் இணைத்தல் என்பதாக மட்டும் இருப்பதில்லை. அது வேத வசனரீதியான ஒரு நடைமுறையாக உள்ளது, நிச்சயமாகவே - இது நான் செயல்முறைப் படுத்துவதாகவும் மற்றவர்கள் செயல்முறைப் படுத்தும்படி நான் போதிப்ப தாகவும் உள்ளது. இருப்பினும், "இயேசுவின் நாமத்தில்" ஜெபித்தல் என்பது அதைக்காட்டிலும் அதிகமானதாக உள்ளது.

"இயேசுவின் நாமத்தில்" ஜெபித்தல் என்பது, பிதாவினிடத்தில் சேரும் வழியை அளித்துள்ள இயேசு கிறிஸ்துவின் நபர்த்துவம் மற்றும் அதிகாரம் ஆகியவற்றின் மூலமாக ஜெபத்தில் தேவனை அணுகுதலாக உள்ளது.

அவரின்றி நாம், ஆவிக்குரிய வகையில் மதிப்பு அல்லது தனிச்சிறப்பு வாய்ந்த எதையும் செய்ய இயலாது.

"இயேசுவின் நாமத்தில்" ஜெபித்தல் என்பது, இயேசுவின் தகுதிச் சிறப்பினால் பெற்ற வழிமுறையே நாம் தேவனிடத்தில் சேருவதற்கான ஒரே அணுகுமுறையாக உள்ளது என்ற உண்மையை உணர்ந்து அறிதலாக உள்ளது. கிறிஸ்துவுடன் ஒரு ஜீவனுள்ள மற்றும் நிலையான உறவுமுறை இல்லையேல், நாம் பரிசுத்தமான தேவனுக்கு முன்பாக ஜெபத்தில் வந்து சேரத் தகுதியற்றவர்களாக இருக்கின்றோம். கிறிஸ்து தகுதி வாய்ந்தவராக இருக்கின்றார். நமது பிரதான ஆசாரியர் என்ற வகையில் அவருடனான நமது ஐக்கியத்தின் நிமித்தமாகவே நாம் நமது தேவைகளின் வேளைகளில் அவருடன் தேவனுடைய கிருபாசனத்திற்கு முன்பாக தைரியமாக வந்து சேர அனுமதிக்கப்பட்டுள்ளோம்.

பாவநிவிர்த்திக்கான கிறிஸ்துவின் இரத்தத்தின் அடிப்படையில் மாத்திரமே நாம் தேவனிடத்தில் மன்னிப்பைக் கேட்க முடியும். பரிவிரக்க மும் உண்மை நிறைவும் கொண்ட பிரதான ஆசாரியர் என்ற வகையில் அவரது பரிந்து பேசும் கிரியையின் காரணமாக, நாம் கேட்கின்ற இரக்கத் தைப் பெற்றுக் கொள்வோம் என்று அறிகின்றோம்.

நீங்கள் ஜெபிக்கும்போது, "இயேசுவின் நாமத்தில்" ஜெபித்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் ஜெபங்கள் செயல்விளைவுள்ளதாகவும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையுண்டாகும்படி கனிநிறைந்ததாகவும் இருக்கும்படிக்கு, கிறிஸ்து வின் அதிகாரத்தில் ஜெபியுங்கள்.

ஹாரி கிப்ஸன்

---

குறிப்பு

[1]William Hunter, "The Great Physician," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994).

# பாவியின் ஜெபங்களைத் தேவன் கேட்கின்றாரா?

*"பாவிகளுக்குத் தேவன் செவிகொடுப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்"*
*(யோவா. 9:31).*

*யோவான் 9:31 வசனம், விலகியிருக்கும் பாவி (ஒருக்காலும் கிறிஸ்தவராகாதிருக்கின்ற) ஒருவர் இரட்சிப்புக்காக ஜெபிக்கும்போது, அவரது ஜெபத்தைத் தேவன் கேட்க மாட்டார் என்று "நிரூபிக்க" பயன்படுத்தப் பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டின் எவ்விடத்திலும் கிறிஸ்தவரல்லாத ஒருவர் இரட்சிப்படைவதற்காக ஜெபிக்கும்படி கூறப்படுவதில்லை. மாறாக, புதிய ஏற்பாட்டின் போதனையைக் கேட்பவர்கள், இரட்சிப்படைவதற்கு, விசுவாசித்து கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று போதிக்கப்பட்டார்கள் (எடுத்துக்காட்டாக, அப். 2:36-38ஐக் காணவும்). இருப்பினும், யோவான் 9:31 வசனமானது பின்வரும் சத்தியங்களை நிலைநாட்ட மிகச்சிறந்த வசனப் பகுதியாக இருப்பதில்லை: (1) இவ்வார்த்தைகளைப் பேசியவர் ஏவுதல் பெற்றவரல்ல; (2) இவ்வசனப் பகுதியில் குறிப்பிடப் பட்டுள்ள "பாவிகள்" என்பது விலகியுள்ள பாவிகளையல்ல, ஆனால் தேவனுக்கு உண்மையாயிராத அவருடைய பிள்ளைகளை (அதாவது கீழ்ப்படியாமையுடன் இருந்த இஸ்ரவேல் ஜனங்களை) குறித்தது.*

*பாவியாக இருப்பவர் தேவனுக்குக் கீழ்ப்படிந்தாலன்றி, அந்தத் தனிநபரின் ஜெபத்திற்கு அவர் [தேவன்] பதில் அளிக்கமாட்டார் என்பது உண்மையே (மத். 7:21-23). தேவன் தமது பிள்ளைகளின் வேண்டுகோள்களுக்குச் செவிகொடுக்கும் (மற்றும் பதில்தரும்) அதே வழிமுறையில் (மத். 7:11), கிறிஸ்தவரல்லாத ஒருவரின் வேண்டுகோள்களைக் கேட்க மாட்டார் என்பதும் உண்மையாகவே உள்ளது. (உங்கள் குழந்தைகளின் வேண்டுகோள்களையா அல்லது உங்கள் அயலகத்தவரினுடைய குழந்தைகளின் வேண்டுகோள்களையா, எவற்றை நீங்கள் அதிகமாக நிறைவேற்றுவீர்கள்?) இருந்தபோதிலும், இரட்சிக்கப்படாதிருந்த ஒரு மனிதரின் ஜெபத்திற்குத் தேவன் செவிகொடுத்தார் என்பதற்கு குறைந்தபட்சம் ஒரு பதிவையாவது நாம் கொண்டுள்ளோம்: கொர்நேலியு (அப். 10:1-5; 11:14). (கொர்நேலியுவின் ஜெபம், சுவிசேஷத்திற்கு அவர் கீழ்ப்படிதல் என்பது இல்லாமல் அவரை இரட்சிக்கவில்லை, ஆனால் அவரது ஜெபம் தேவனால் கேட்கப் பட்டது.)*

*வேதாகமத்தில் சற்றே பழக்கமானவர்கள் யோவான் 9:31ஐ உங்களைச் சுற்றித் திருப்பிவிடக்கூடும். ஒருமுறை நான், தமது பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறவேண்டியிருந்த ஒரு மனிதருடன் வேதாகமத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். அவர் யோவான் 9:31ஐ மேற்கோள்*

காண்பித்து, “தேவன் பாவிகளுக்குச் செவிகொடுப்பதில்லை, ஆனால் தேவன் எனது ஜெபத்தைக் கேட்கின்றார். ஆகையால் நான் பாவியல்ல. எனக்கு ஞானஸ்நானம் தேவையில்லை” என்று கூறினார்.

நாம் யோவான் 9:31ஐயாவது அல்லது வேறு எந்த வசனப் பகுதியையாவது போதித்தாலும், வேத வசனங்களை நாம் எவ்வாறு பயன்படுத்துகின்றோம் என்பது பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நாம் எப்போதுமே, மிகுந்த கவனத்துடன் நேர்மையாக இருக்க வேண்டும்.

டேவிட் ரோப்பர்

# "நரகத்திலிருந்து" ஒரு கடிதம்

*காணப்படாத வட்டாரம்*
*நேற்று, இன்று மற்றும் நாளை*
*கர்த்தர் வரும் வரைக்கும்*

*அன்பு நண்பரே,*

*என்னிடத்திலிருந்து இதைக் கேள்விப்படுவதில் நீங்கள் திகைப்படை வீர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. உண்மையில், நானே திகைப்படைந் துள்ளேன். இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களோடு செய்தித் தொடர்பு கொள்ள ஒரு வாய்ப்பு என்பது முற்றிலுமாக முன்பு நடந்திராத ஒன்றாக உள்ளது. எனக்கு இப்படிப்பட்ட ஒரு வாய்ப்புக் கொடுக்கப் பட்டது ஏன் என்று நான் அறியவில்லை, ஆனால் இதை நான் மிகவும் பயன்படுத்திக்கொள்வேன் என்று நம்பிக்கையாக இருக்கின்றேன்.*

*எனது வரலாறு உங்களுக்கு பழக்கமானது என்பதால், அந்த விவரங் களை நான் மீண்டும் எடுத்துரைக்க மாட்டேன். மாறாக, எனது அனுபவங் களில் இருந்து நான் கற்றுக்கொண்டது என்ன என்பதை நான் உங்களுக்குக் கூற விரும்புகின்றேன். அவற்றை நான் மிகவும் தாமதமாகவே கற்றுக் கொண்டேன், எனவே இந்தச் செய்தியைப் பிறருக்குக் கொண்டு செல்லுவ தில் நான் உங்களைச் சார்ந்து இருக்கின்றேன். தயவுசெய்து மற்றவர்கள் இதைக் கேள்விப்படும்படி இதை நீங்கள் செய்யுங்கள்! ஆயினும், நான் எனது வரலாற்றை முன்னெடுத்து வைக்கின்றேன்.*

## *"உங்கள் வாழ்வைத் தேவனுக்காகப் பயன்படுத்துங்கள்"*

*ஒவ்வொருவரின் வாழ்வும் ஒரு நோக்கத்தைக் கொண்டுள்ளது என்பது நான் குறிப்பிடுகின்ற முதல் - மற்றும் அநேகமாக மிகவும் முக்கியமான - விஷயமாக உள்ளது. நாம் ஒரு நோக்கத்திற்காகவே பூமியின்மீது விடப் பட்டிருந்தோம். தேவனுக்கு ஊழியம் செய்து அவரை மகிமைப்படுத்துதல் என்பதே அந்த நோக்கமாக உள்ளது. தமது வாழ்வைத் தேவனுக்கென்று பயன்படுத்தக் கற்றுக்கொண்ட மனிதர் எவ்வளவு ஞானவானாக இருக்கின்றார்!*

---

*ஆசிரியரின் குறிப்பு: வழக்கத்திற்கு மாறான இந்த அணுகுமுறையை நீங்கள் பயன்படுத்தினால், இதைத் தொடங்குமுன்பு, நீங்கள் இந்தப் பிரசங்கம் லூக்கா 16:19-31ன் அடிப்படையில் அமைந்துள்ளது, மற்றும் இது அவ்வசனப்பகுதியில் பணக்கார மனிதரின் கூற்றிலிருந்து எடுத்துரைப்பாக முன் வைக்கப்படுகிறது என்பதை நீங்கள் விளக்கப்படுத்துவது அவசியமாக இருக்கும்.*

நான் இன்னும் உயிரோடிருக்கும்போதே இதைக் கற்றுக்கொள்ளா திருந்தேன். அது, நான் துடிப்புமிக்க வகையில் மோசமாயிருந்தேன் என்பதல்ல. உண்மையில், நான் அறிந்த வரையில், நான் செய்த செயல்கள் பற்றி விமர்சனம் எதுவும் ஏற்படுத்தப்பட்டிருந்ததில்லை. மாறாக, நான் செய்யாமல் இருந்தவையே என் தவறாக இருந்தது.

எனது வாழ்வு தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்ததா என்று நீங்கள் என்னைக் கேட்டால், நான் திகைப்படைந்தவனாகக் காணப்பட்டு, "ஐயா, நான் ஒரு யூதன். தேவாலய ஆராதனைகளில் நான் உண்மையுடன் கலந்து கொண்டேன். குறிப்பிடப்பட்ட பலிகளை நான் செலுத்தினேன். நியாயப் பிரமாணத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டபடி நான் கொடுத்தேன் என்று கூறியிருப்பேன். நீங்கள் என்னிடத்தில், நான் என் வாழ்வைத் தேவனுக்குப் பயன்படுத்தினேனா என்று கேட்கின்றீர்கள்!'' ஆனால் அதை நான் செய்யவில்லையே. நான் பக்தியுடன் இருப்பதை, நீதியுடன் இருப்பதென்று தவறாக நினைத்துக் கொண்டிருந்தேன். ஆராதனை ஊழியத்தில் கலந்து கொள்ளுதல், பலிசெலுத்துதல், கொடுத்தல்: அந்த விஷயங்கள் சிறந்த வையே; ஆனால் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தலில் இருந்து தனிமைப் படுகையில் அவை யாவையும் வெறுமையும் வீணானவையுமாக உள்ளன. தேவனை மையங்கொண்ட வாழ்வையே தேவன் விரும்புகின்றார்.

அப்போது எனது சிந்தனையில், தேவன் மிகச் சிறிதளவே இடம் கொண்டிருந்தார் - இப்போதோ, அவரது ஒரு சிறு பார்வைக்கு நான் எதை வேண்டுமானாலும் கொடுப்பேன்!

## "பொருட்களினால் வஞ்சிக்கப்பட்டு விடாதிருங்கள்"

உலகப் பொருட்களினால் நான் வஞ்சிக்கப்பட்டிருந்தேன் என்பது எனது பிரச்சனையின் ஒரு பாகமாக இருந்தது. இன்றைய நாட்களில் பூமியிலிருந்து பாதாளத்திற்கு வருகின்ற மக்கள் ஏதேனும் குறிப்பதாக இருக்கின்றார்கள் என்றால், அந்த சூழ்நிலையே இன்னமும் நிலவுகிறது.

உலக உடமைகள் என்னை இரு வழிகளில் வஞ்சித்தன. முதலாவது இடத்தில் அவைகள் எனக்கு மிகவும் முக்கியமானவைகளாக இருந்தன. இங்கு நான் சூழ்நிலையை பகுத்தாய்வு செய்த வழிமுறை உள்ளது (இதைப் பற்றிச் சிந்திக்க நான் நீண்ட காலத்தைக் கொண்டிருந்தேன்): நீங்கள் பொருட்களைக் காண இயலும், ஆனால் நீங்கள் ஆத்துமாவையோ அல்லது தேவனையோ அல்லது ஆவிக்குரிய உண்மை நிலைகளையோ காண இயலாது. பொருட்கள் உங்கள்மீது நிலையான கட்டாயங்களை ஏற்படுத்து கின்றன, அதேவேளையில் ஆத்துமாவானது பின்னணியில் தங்கியிருந்து, உங்கள் கவனத்திற்காகக் காத்திருக்கிறது. பொருட்கள் உங்களை ஐம்புலன் களின் மூலம் வசீகரிக்கின்றன, அதே வேளையில் ஆத்துமாவானது தனது வசீகரத்தை அதிகம் மறைவாக ஏற்படுத்துகிறது. உலகப்பிரகாரமான மற்றும் தற்காலிகமான பொருட்கள் உண்மையிலேயே முக்கியமானவைகளாக உள்ளன என்று உணருவது எவ்வளவு சுலபமானதாக இருக்கிறது! சிறு

விஷயங்களினால் ஒருவர் விரைவிலேயே மூடப்பட்டு விடுகின்றார் - மற்றும் தேவன் மறக்கப்பட்டவராகின்றார்.

மேலும், பொருட்கள் எனக்கு ஏராளமாய் உண்டாயிருந்ததை தேவனுடைய தயவுக்கு நிரூபணமாக எடுத்துக் கொண்ட வகையிலும் அவை என்னை வஞ்சித்தன. செல்வத்தினால் சூழப்பட்டு மனிதரால் கனப்படுத்தப்பட்டு இருந்த நிலையில், எனது வாழ்வு கர்த்தரைப் பிரியப்படுத்தாததாக இருக்கலாம் என்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தல் என்பது எனக்குச் சாத்திய மற்றதாக இருந்தது. வேத வசனம் சொல்லுவது போல், புறத்தோற்றத்தை அல்ல, ஆனால் இருதயத்தையே தேவன் கண்ணோக்குகின்றார் என்பதைக் கற்றுக்கொள்ளுதல் என்பது எனக்கு எவ்வளவு அதிர்ச்சியாக இருந்தது![1] பொருட்கள் எவ்வளவு வஞ்சிக்கக்கூடியவையாக இருக்கக் கூடும்!

என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள். அந்தக் காலத்தில் நான், அரசர்கள் மற்றும் மேன்மக்களின் உடைகளான இரத்தாம்பரத்தையும் மெல்லிய உடைகளையும் உடுத்திக் கொள்வதை மகிழ்வுடன் அனுபவித்தேன். நான் மாபெரும் விருந்துகளையும் சந்தோஷக் களிப்பையும் மகிழ்வுடன் அனுபவித்தேன். நான் மனிதர்களின் பாராட்டுதல்களையும் என்னுடன் இணைந்திருந்தவர்களின் போற்றுதலையும் மகிழ்வுடன் அனுபவித்தேன். இப்போது அதெல்லாம் என் வாயில் சாம்பல் போல் உள்ளது. அறிவதற்குத் தகுதியான ஒருவன் என்ற வகையில் நான், ஆடம்பரமாய் வாழ்தல் என்பது மதிப்பற்றதாக இருந்தது என்று உங்களுக்குக் கூறுகின்றேன். நீதியின் வெண்மையான உடைகள் விற்கப்பட்டு இரத்தாம்பரமும் மெல்லிய உடைகளும் வாங்கப்பட்டன, தேவனுடன் நித்தியமான விருந்து என்பது விற்கப்பட்டு பூமியில் சுமாரான சுவையுணவுள்ள விருந்து வாங்கப்பட்டது, தேவனுடைய அங்கீகாரம் என்பது விற்கப்பட்டு மனிதர்களின் போற்றுதல் வாங்கப்பட்டது - இவை மிகவும் வறிய வர்த்தகங்களல்லவா!

உடமைகளைக் கொண்டிருத்தல் என்பது தன்னிலே தவறானது அல்ல. உடமைகளின்மீதான வலியுறுத்தம், அவற்றின்மீது வைக்கப்பட்ட முக்கியத்துவம் என்பதுதான் ஒரு மனிதனின் ஆத்துமாவை அழிக்கிறது. பொருட்கள் உங்களைக் கட்டுப்படுத்தும்போது, நீங்கள் இழந்துபோகப் படுகின்றீர்கள்.

ஓ, இந்தக் கருத்து எவ்வளவு பலமாக இருக்க வேண்டுமோ, அவ்வளவு பலமாக ஏற்படுத்தச் சில வழிகள் இருந்தன! தேவனுக்கு நேரம் இல்லாத படிக்குத் தங்கள் வேலையுடன் மிகவும் பிணைக்கப்பட்டிருப்பவர்களுக்கு, ஓய்வு நேரத்தின் கணம் ஒவ்வொன்றையும் பிறருக்குப் பதிலாகத் தனக்கே செலவிட்டுக் கொண்டுள்ளவர்களுக்கு, ஆவிக்குரியவற்றைக் காட்டிலும் உலகத்திற்குரியவைகள்மீது அதிக அக்கறையாக இருப்பவர்களுக்கு, எனது முழு இருப்பின் வலிவுடன் நான் பின்வருமாறு கூற அனுமதியுங்கள்: அப்படிப்பட்ட ஒரு வாழ்வுப் பாங்கானது விலை மதிப்புள்ளதல்ல! இந்த இடத்தில் முதல் கணமானது ஒருவரின் மதிப்புகள் பற்றிய உணர்வுக்கூறுமீது திகைக்க வைக்கும் செயல்தாக்கத்தைக் கொண்டுள்ளது.

## “உங்கள் வாய்ப்புக்களைப் பயன்படுத்துங்கள்”

*ஊழியங்கொள்வதற்கல்ல ஆனால் ஊழியம் செய்வதற்கு வாய்ப்புக் களைக் கண்ணோக்குதல் என்பதே ஒரு நபர் செய்ய வேண்டியதாக உள்ளது. பின்னோக்கிப் பார்க்கையில், நான் பல வாய்ப்புக்களைக் கொண்டிருந்ததை உணர்ந்தறிகின்றேன். அந்த ஒவ்வொரு வாய்ப்பும், எனக்கு முக்கியமானதாக இருந்தது எது என்பதற்கான ஒரு பரீட்சையாக இருந்தது என்பதையும், இப்போது நான் கவலையோடு உணர்ந்தறிகின்றேன்.*

*லாசரு என்ற பெயர்கொண்டிருந்த அந்தப் பிச்சைக்காரரைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். (அது நான் ஒருக்காலும் மறவாதிருக்கின்ற ஒரு உதாரணமாக உள்ளது!) அந்த விஷயத்தைச் சிந்திக்க நான் கவலை கொண்டிருந்தால், அநேகமாக நான், எனது நித்திய இரட்சிப்பானது நான் பரிதாபமான ஏழ்மையில் இருந்தவர்களை எவ்வாறு நடத்தினேன் என்பதைத் தவிர ஏறக்குறைய எந்த விஷயத்தையும் சார்ந்திருந்தது என்று கூறியிருக்கலாம். நான் எவ்வளவு தவறானவனாக இருந்தேன்!*

*அவர் இருந்ததை நான் தெளிவற்ற வகையில்தான் அறிந்திருந்தேன் என்று யூகிக்கின்றேன் - ஆனால் அவரை நான் வேறு எதைக்காட்டிலும், ஒரு சிறு தொந்தரவுக்குச் சற்றே அதிகமானதாகவே கண்டிருந்தேன். பலஸ்தீனத்தில் ஒரு டிராக்மாவுக்கு டஜன் கணக்கில் பிச்சைக்காரர்கள் இருந்தார்கள். எனவே, அவரது உடலில் புண்கள் மூடியிருந்தன; எனவே அவர் உணவுத் துணுக்குகளுக்காக நாய்களுடன் சண்டையிட வேண்டியிருந்தது. கூடுதலாக இன்னும் ஒரு ஊனமாயிருந்தவர் இருந்தால் எனக்கு என்ன? சற்றுப்பின்பு, இந்த லாசரு எனது வாயிலின் அருகில் ஒரு நிலையுருவமாக இருக்க வேண்டியதாயிற்று, அவரைக் குறித்து நான் சிறிதளவே சிந்தனை கொண்டிருந்தேன். சிந்திப்பதற்கு “முக்கியமான” விஷயங்களைக் கொண்டிருந்தேன் - நான் அவ்வளவு முட்டாளாக இருந்தேன்.*

*நான் ஏன் அந்தப் பிச்சைக்காரருக்கு உதவாதிருந்தேன் என்று என்னிடத்தில் அறைகூவல் விடப்பட்டிருந்தால், பதில்களின் சரவரிசையொன்றை நான் கொண்டிருப்பேன்: “நான் நிதியைத் தேவாலயத்திற்குக் கொடுத்து வருகிறேன்; அவர்கள் அவரைக் கவனித்துக் கொள்ளட்டும்”; “இந்தப் பிச்சைக்காரர்களில் ஒருவரை நான் கவனிக்கத் தொடங்கி விட்டால், நான் அவர்கள் எல்லாரையும் கவனித்தாக வேண்டியிருக்கும்”; “இது எவரொருவரின் வேலையாயிருப்பதை விட அதிகமாக எனது வேலையாக இருப்பதில்லை.”*

*நான் இரண்டு விஷயங்களைக் காணத்தவறிவிட்டேன்: (1) அந்த அழுக்குக்கும் அசுத்தத்திற்கும் கீழ் ஒரு மனிதர் இருந்தார் ... ஆத்துமாவுடன் கூடிய ஒரு மனிதர் இருந்தார் ... ஒரு சக மனிதப்பிறவி இருந்தார். அவருக்கு ஊழியம் செய்யத் தவறியதில், நான் எனது சொந்த மனிதத்துவத்தை மறுத்திருந்தேன். (2) எனது வாயிலின் அருகே கிடந்த அவர், ஒரு விசேஷித்த வகையில் எனது பொறுப்பாக இருந்தார். அவர் எனது வாய்ப்பாக மற்றும் எனது பரீட்சையாக இருந்தார் - நான் பரிதாபகரமாக தோல்வியடைந்த ஒரு பரீட்சையாக இருந்தார்.*

நான் தனிப்பட்ட வகையில் இருக்க அனுமதிக்கப்பட்டிருந்தால்: உங்கள் காலத்தைப் பற்றி (இங்கு அன்றாடம் வந்து சேருபவர்களிடமிருந்து) நான் கேள்விப்பட்டபடியாக, இது வாய்ப்பின் காலமாக உள்ளது. எனது நாட்களின் தரஅளவையின்படி நான் பணக்காரனாக இருந்தும்கூட, அங்கு இருந்த ஒரு சிலரின் ஆசீர்வாதங்களுடன் என்னுடையவற்றை என்னால் ஒப்பிடக் கூடாதிருந்தது. பிறருக்கு உதவுவதற்குப் பெருக்கமடைந்த வாய்ப்புகளை, தேவனுடைய வசனத்தைப் போதிக்கக் கூடிய மாபெரும் வாய்ப்புகளை, நூற்றுக்கணக்கான வழிமுறைகளில் நீங்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்ய நீங்கள் கொண்டுள்ள ஆச்சரியமான வாய்ப்புக்களைப் பற்றியும்கூட நான் கேள்விப்பட்டுள்ளேன். அறிந்துள்ள ஒருவரிடமிருந்து [பின்வரும்] ஆலோசனையை எடுத்துக்கொள்ளுங்கள்: உங்களுக்குக் கிடைத்துள்ள ஆசீர்வாதங்களை இலேசாக எண்ணாதீர்கள். உங்கள் வரங்களைத் தேவனுக்கென்று பயன்படுத்துங்கள். நன்மை செய்வதற்கு உங்களுக்குக் கிடைத்துள்ள வாய்ப்புக்களை அனுகூலப்படுத்திக் கொள்ளுங்கள்.

இழந்துபோகப்படுவதற்கு, களவு செய்யவோ, கொலை செய்யவோ அல்லது ஒழுக்கமற்றவராக இருக்கவோ தேவையில்லை என்ற விஷயத்தைக் கடினமான வழிமுறையில் நான் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. செயல்துடிப்புள்ள வகையில் நல்லதொரு வாழ்வை வாழத் தவறுதல் என்பதே அதற்கு[இழந்து போகப்படுதலுக்கு]ப் போதுமானதாக உள்ளது.[2]

## “ ‘நரகம்’ ஒரு பயங்கரமான இடமாக உள்ளது”

அது என்னை, சிந்தனையின் இரண்டாவது வரிசைக்கு வழிநடத்துகிறது - இது நான் கற்றுக்கொண்ட மற்றும் உங்களிடத்தில் எடுத்துரைக்க விரும்புகின்ற இரண்டாவது விஷயமாக உள்ளது: உங்கள் வாழ்வைத் தேவனுக்குப் பயன்படுத்துங்கள், ஏனென்றால் “நரகம்” ஒரு பயங்கரமான இடமாக உள்ளது!

“நரகம்” என்ற வார்த்தையை நான் மேற்கோள் குறிக்குள் இட்டுள்ளேன், ஏனென்றால் நான் கிரேக்க மொழியில் *gehenna* என்று அழைக்கப்படுகிற இடமான, கெட்டுப்போனவர்களின் நித்திய வட்டாரத்திற்குள் இன்னமும் சென்றிருக்கவில்லை. இப்போதைக்கு நான், மரித்தவர்கள் இருக்கும் இடைநிலையான இடத்தில் - காணப்படாத உலகத்தில் - இருக்கின்றேன், மரித்த யாவரும் இங்கு காணப்படுகின்றார்கள். உங்கள் உலகத்திலிருந்து இங்கு எனக்குத் துணையாளர்களாக வந்துள்ள சிலர், மாறுபட்ட மூன்று விஷயங்களை “நரகம்”[3] என்று குறிப்பிடுகிற, மாறுபட்ட மூன்று கிரேக்க வார்த்தைகளைப் பெரும்பாலான பொதுப்பதிப்பு[4] மொழிபெயர்த்துள்ளதாக எனக்குக் கூறுகின்றனர். இது முற்றிலும் குழப்பமூட்டுவதாக இருக்க வேண்டும். (உங்கள் வேதாகமத்தில் லூக். 16ல் காணப்படுகிற) எனது வரலாற்றில் “நரகம்” என்பதற்குப் பதிலாக [Hades][5] என்று இருக்க வேண்டும். இந்த கிரேக்க வார்த்தை “காணப்படாத [உலகம்]” என்று அர்த்தப்படுகிறது. இந்த “Hades” என்பது இடம் என்பதைக் காட்டிலும்

அதிகமாக, இருப்புநிலை என்பதாகவே உள்ளது. இந்தக் கருத்தை நீங்கள் முற்றிலுமாக புரிந்துகொள்வதற்கு வழி எதுவும் இல்லை; எனவே ஒரு நாளில், நீங்கள் மரிக்கும்முன்பு கிறிஸ்து வராதிருந்தால், [நீங்கள் மரிக்கும்போது] இங்கு வருவீர்கள் மற்றும் நீங்களே இவ்விடம் எதுபோல் இருக்கிறது என்பதை அறிந்துகொள்வீர்கள் என்பதை அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஹேடிஸ் என்பது நல்லவர்கள் மற்றும் மோசமானவர்கள் ஆகிய மரித்தவர்களின் ஆத்துமாக்கள் காணப்படக்கூடிய இடமாக உள்ளது. இங்குதான் நாம் யாவரும் கடைசி நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருக்கின்றோம். இங்கு நல்லவர்கள் காணப்படக்கூடிய ஒரு "பகுதி"யும் (இது மிகச் சரியானதல்லாத ஒரு சொற்றொடராக உள்ளது, ஆனால் கருத்தைத் தெரிவிக்கக்கூடிய, நான் நினைத்துப் பார்க்கக் கூடிய ஒரே சொற்றொடராக உள்ளது), பொல்லாதவர்கள் காணப்படக்கூடிய இன்னொரு "பகுதியும்" உள்ளது. எனவே, நான் நரகத்தில் அல்ல ஆனால் ஹேடிஸில் கடைசி தண்டனைக்காகக் காத்து இருக்கின்றேன் என்று நீங்கள் காணுங்கள்.

அதைக் கூறியுள்ள நிலையில், உண்மை நடைமுறையில் மரித்தவர்கள் இருக்கும் இடைநிலையான நிலைப்பாட்டிற்கும் மரித்தவர்களின் கடைசி நிலைக்கும் அதிகம் வேறுபாடு இல்லை என்பதைக் கூற என்னை அனுமதியுங்கள். தேவனுக்கு உண்மையாக இருந்தவர்கள் இங்கு வலிவார்ந்த மகிழ்வுடன் இருக்கின்றார்கள் - மற்றும், கர்த்தருக்கு உண்மையற்று இருந்தவர்கள் பயங்கரமான, பயங்கரமான மகிழ்வற்ற நிலையில் இருக்கின்றார்கள்.

காணப்படாத உலகில் நான் இருக்கின்ற இடத்தின் பயங்கரத் தன்மை பற்றி எடுத்துரைக்க எனக்கு வழியெதுவும் இருப்பதில்லை. இது மனிதனால் புரிந்துகொள்ளக் கூடியதற்கு அப்பால் உள்ளது. இந்த இடத்தில் ஒரு வினாடி நேரம் எவரொருவராவது இருந்தால், அது அவரை உடனே தேவனிடம் ஓடிப் போகும்படி இணங்க வைக்கும். எனது பெருந்துன்பத்தை விவரிப்பதற்கான எனது முயற்சிகள் போதுமானவைகளாக இருப்பதில்லை, ஆனால் ஒருவேளை ஒரு சில விவரங்கள், நீங்கள் இவ்விடத்திற்கு வராதிருப்பதற்கான உங்கள் தீர்மானத்தைப் பெலப்படுத்த உங்களுக்கு உதவிகரமாயிருக்கும்.

**வேதனையின் இடம்**

முதலில், ஹேடிஸில் எனது பகுதி வாதை இடமாக உள்ளது. இந்த வாதையைச் சித்தரிக்க எந்த மொழியிலும் போதுமான வார்த்தைகள் இல்லை. உங்கள் வேத வசனமானது இந்தக் கருத்தை எடுத்துரைக்க அக்கினி என்ற உருவகத்தைப் பயன்படுத்துகிறது என்று எனக்குக் கூறப்பட்டுள்ளது. இது ஒரு நல்ல உருவகமாக உள்ளது. தீக்காயம் ஒன்றை நீங்கள் எப்போதாவது பெற்றுப் பொறுத்திருந்தீர்கள் என்றால், அது எவ்வளவு வேதனை நிறைந்ததாக இருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த வேதனையை நினைவில் வைக்க முயற்சி செய்யுங்கள். பின்பு உங்கள் உடலின் ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் சுடப்படுவதைக் கற்பனை செய்து பாருங்கள். கடைசியாக, உள்ளூர எரிபடுவதைக் கற்பனை செய்து

பாருங்கள் - இது, உங்கள் ஆத்துமாவானது நித்தியத்திற்கும் அக்கினியில் இருந்து, எப்போதும் எரிந்துகொண்டு, ஆனால் முற்றிலுமாக எரிக்கப்படாது இருக்கும் நிலையாக உள்ளது.

அதைப் பற்றி யோசிக்கும்போதே, என்னை ஏறக்குறைய பைத்திய மாக்குகின்றது! ஓ, ஒரு சிறு நிவாரணம் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! தண்ணீரின் மிகச் சிறு துளியானது எனது நாவின் நுனியில் இடப்பட்டால் எவ்வளவு நிம்மதியாக இருக்கும்! ஏதாவது ஒரு நிவாரணம் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! நித்தியம் முழுவதற்கும், இந்த வலிக்கு, இந்தப் பெருந்துன்பத்திற்கு இந்த அவஸ்தைக்கு ஆளாகியுள்ளேனே ... இதை நான் எப்படிச் சகிக்க முடியும்?

நான் எனது சக்தியை ஒன்றுகூட்டியிழுத்து, இந்தக் கடிதத்தை [எழுதி] முடிக்க வேண்டும். இந்த சூழ்நிலைகளின்கீழ் நான் எனது சிந்தனைகளை முறைப்படுத்துவது என்பது எனக்கு எவ்வளவு கடினமாக உள்ளது என்பதை நீங்கள் ஒருக்காலும் மதித்துணர மாட்டீர்கள். முயற்சியானது ஏறக்குறைய எனக்கு அப்பால் உள்ளது. இருப்பினும், ஒரு ஆத்துமாவை இங்கு வரவிடா திருக்க என்னால் முடியுமென்றால், எனது முயற்சி தகுதியானதாகவே இருக்கும்.

**நினைவின் இடம்**

இது வாதையின் இடமாக உள்ளது என்பதை விட இது நினைவின் இடமாக உள்ளது என்ற உண்மையானது இன்னும் பயங்கரமானதாக உள்ளது. எனது நாட்களில், மனிதனுக்கு ஆத்துமா என்ற ஒன்று இல்லை, இவ்விதமாக மரணத்தில் ஒருவர் உணர்வற்ற நிலையை எய்துவார் என்று சதுசேயர்கள் வாக்குவாதம் செய்தார்கள். அது அப்படி இருந்திருக்க வேண்டும் என்று நான் எவ்வளவாக விரும்புகின்றேன்! மரணத்திற்குப் பின்பு ஒருவர் - தாம் எங்கு இருக்கின்றோம், தனக்கு நேரிடுகின்ற ஒவ்வொரு விஷயமும் எப்படி இருக்கிறது மற்றும் நித்தியமான விஷயங்கள் ஆகியவை பற்றி - மிகவும் உணர்வுள்ள நிலையில் இருக்கின்றார் என்பதே உண்மை யாய் இருக்கிறது.

மனமானது உலகப்பிரகாரமான உடலில் இருந்து விடுதலையான வுடன், இது புரிந்துகொள்வதற்கான மாபெரும் திறனை ஆதாயப்படுத்திக் கொள்ளுவதாகக் காணப்படுகிறது. இது ஏன் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. ஒருவேளை, உலகப்பிரகாரமான நிலையின் விலங்கிலிருந்து விடுபட்ட நிலையில் மனமானது, எல்லாம் அறிந்த, எங்கும் நிறைந்த தேவனுடைய மனதிற்குத் தக்கபடி இசைவிக்கப்படக் கூடியதாக இருக்கலாம் - இது, நீங்கள் இரட்சிக்கப்பட்டவர்களின் வட்டாரத்திற்குள் இருந்தால் ஒரு வியத்தகு சூழ்நிலையாக இருக்கும், ஆனால் அழிவுக்கு நியமிக்கப்பட்டவர்களின் வட்டாரத்தில் நீங்கள் இருக்கும்போது இது மிகவும் கோரமான சூழ்நிலையாக உள்ளது! காரணம் எதுவாக இருப்பினும், இதற்கு முன் நான் ஒருக்காலும் அறிந்திராத விஷயங்களை நான் [இப்போது] அறியக்கூடியவனாக இருக்கின்றேன். எடுத்துக்காட்டாக, நான் இதற்கு முன்பு ஒருக்காலும் பார்த்திராத [ஹேடிஸில் "இன்னொரு

பகுதியான'' நீதிமான்களின் வட்டாரத்திற்குள் இருந்த] ஆபிரகாமை இப்போது நான் உணர்ந்தறிந்தேன்.

நான் இன்னமும் எனது பழைய நினைவுகளை - ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் இங்கு இருந்திருந்த போதிலும் மங்கிப் போகாத நினைவுகளை, இரக்கமற்ற வகையில் என்னை வேட்டையாடுகிற நினைவு களை - உடையவனாக இருக்கின்றேன். ஆபிரகாம் என்னிடத்தில், "மகனே, ... நினைத்துக் கொள் ..." என்று கூறியபோது உரைத்த வார்த்தைகளை நான் ஒருக்காலும் மறக்கமாட்டேன். இழந்துபோன அந்த வாய்ப்புக்களை மட்டும் என்னால் மறக்கமுடிந்தால் எப்படியிருக்கும்! நான் எனது வாழ்வை எப்படி வீணாக்கிவிட்டேன் என்பதை மட்டும் என்னால் மறக்க முடிந்தால் எப்படியிருக்கும்! இரட்சிக்கப்பட்டவர்களின் வட்டாரத்திற்குள் சென்று முடிவது என்பது சார்பு நிலையில் எவ்வளவு சுலபமாயிருந்திருக்கும் என்பதை மட்டும் என்னால் மறக்க முடிந்தால் எப்படியிருக்கும்!

சமீபத்தில் இங்கு வந்து சேர்ந்த ஒருவர் நீங்கள் வானத்தில் சுழற்றி அனுப்புகின்ற ராக்கெட் என்ற மாபெரும் குழாய்களைப் பற்றி என்னிடம் கூறினார். இந்த ராக்கெட் தனது பயணத்தைத் தொடங்குகையில் மிகச் சிறிதளவு விலக்கம் ஏற்பட்டாலும் கூட, அது ஆயிரக்கணக்கான மைல்கள் மாறுபாட்டில் முடிவடைந்து விடும் என்று அவர் என்னிடம் கூறுகின்றார். நித்தியம் என்பது எவ்வளவாக இதைப் போன்றதாக உள்ளது! சிறு விஷயங்கள், சிறு தேர்ந்துகொள்ளுதல்கள், சரியானதை அல்லது தவறான தைச் செய்வதற்கு மேற்கொள்ளப்படுபவைகளும், தனிச்சிறப்பற்றவை என்று நிதர்சனமாகத் தெரிபவைகளுமான முடிவுகள் - இவை பெரும் பாலும் நமது நித்திய அடைவிடத்தைத் தீர்மானிக்கின்றன. நீங்கள் இங்கு வந்தால், என்னைப் போலவே நீங்களும், அந்தச் ''சிறிய'' முடிவுகள் ஒவ்வொன்றையும் பகுத்தாய்ந்து, "நான் ஏன் இதைச் செய்தேன்? நான் ஏன் அதைச் செய்யாதிருந்தேன்?'' என்று உங்களையே கேட்டுக்கொண்டு இருப்பதில் நித்தியத்தைச் செலவிடுவீர்கள்.

இரட்சிக்கப்பட்டவர்களுக்கான நினைவுகள் ஒப்பிடுவதற்கும் அப்பால் உள்ள ஒரு ஆசீர்வாதமாக இருக்க வேண்டும், ஆனால் இழந்துபோகப் பட்டவர்களுக்கோ, நினைவில் கொள்ளுதல் என்பது புரிந்துகொள்ளு தலுக்கு அப்பாற்பட்ட ஒரு சாபமாக உள்ளது. நேர்மாறான வகையில், நீங்கள் இந்தச் செய்திக்குச் செவிகொடாமல், எவ்வாறாயினும் இங்கு வந்து சேருதலில் முடிந்தால், நான் உங்களை எச்சரித்ததையும்கூட நீங்கள் நினைவில் வைத்திருப்பீர்கள் மற்றும் இதைக் கவனிக்காது இருந்தமைக்காக நித்தியத்திற்கும் உங்களையே சிட்சித்துக் கொண்டிருப்பீர்கள்.

### நிரந்தரமான ஒரு சூழ்நிலை

நிவாரணத்திற்கு நம்பிக்கை ஏதாவது இருக்குமென்றால் எங்களது சூழ்நிலை சகிக்கக் கூடியதாக இருக்கலாம். ஒரு ஆயிரம் ஆண்டுகளில், அல்லது பத்து இலட்சம் அல்லது ஒரு இலட்சம் கோடி ஆண்டுகளில் ஒரு முடிவு இருக்கும் என்று நாங்கள் அறிய முடிந்தால், எங்களால் இந்த வேதனையை ஏதாவது ஒருவழியில் தாங்கி நிற்க முடியும். ஆனால் விஷயம்

அதுவாக இருப்பதில்லை. இங்கு தொடங்கி மற்றும் *gehenna*வில் தொடரப்போகிற வாதையானது மிகவும் நிரந்தரமானதாக உள்ளது.

*முதன்முதலில் நான் இங்கு வந்து சேர்ந்தபோது, ஆபிரகாமின் வார்த்தைகளைக் கேட்டது எவ்வளவு பயங்கரமானதாக இருந்தது! "அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது."[6] நாம் தேவனுடைய வழியைப் புறக்கணிக்கும் போது[7] ஒரு பெரும்பிளப்பு ... ஒரு பெரும்பிளப்பு நம்மாலேயே தோண்டப் படுகிறது ... இது நித்தியம் முழுவதிலும் நிலைநிறுத்தப்பட்ட பெரும் பிளப்பாக உள்ளது!*

*என் நண்பரே, நான் கூறுவதைக் கவனியுங்கள்: இந்த சூழ்நிலையை விட்டு வெளியேற வழியொன்று உள்ளது என்று உங்களிடம் கூறுபவர்களை நம்பாதீர்கள். ஒரு விலை கொடுத்தால் உபத்திரவப்படுகிற இந்தக் காலவேளையைக் குறைக்க முடியும் என்று மக்கள் கூறும்போது அதை நம்பாதீர்கள். இந்த வேதனை ஒருக்காலும் முடியாது. இன்று இந்த வேதனையில் உள்ள நாங்கள் யாவரும் நாளைக்கும் இதே வேதனையில் இருப்போம், இப்போதிலிருந்து இன்னும் பத்துக் கோடி ஆண்டுகளுக்குப் பின்பும், அதன் பின்பும் பத்துக் கோடி ஆண்டுகளுக்கும் கூட இதே வேதனையில் இருப்போம். நாங்கள் ஒருக்காலும் இதிலிருந்து விடுதலை அடையமாட்டோம். இன்று நாங்கள் நரகத்தை முன்னெதிர்நோக்கி வேதனைப்படுகின்றோம், மற்றும் நாளைக்கும் நித்தியத்திற்கும் நாங்கள் நரகத்தில் உண்மையில் வேதனைப்படுவோம்![8]*

## "இப்போதே அக்கறை கொள்ளும் வேளையாக உள்ளது"

*நான் இரண்டு விஷயங்களை வலியுறுத்தியுள்ளேன்: (1) உங்கள் வாழ்வைத் தேவனுக்கென்று பயன்படுத்துங்கள், ஏனென்றால் (2) "நரகம்" என்பது பயங்கரமான இடமாக உள்ளது. அது என்னைக் கடைசிப் புத்தி மதியைக் கூறும்படி வழிநடத்துகிறது: இப்போதே அக்கறை கொள்ளும் வேளையாக உள்ளது.*

### இப்போதே மற்றவர்களைக் குறித்து அக்கறை கொள்ளுங்கள்

*மரித்தல் என்பது எவ்வளவு திகைப்புக்கு உரியது என்பதை மரணம் வரும்வரை நீங்கள் ஒருக்காலும் அறியமாட்டீர்கள். நீங்கள் பல திட்டங் களைத் தீட்டுகின்றீர்கள். நீங்கள் பல விஷயங்களை செய்தல் குறித்து எண்ணுகின்றீர்கள். பின்பு - சடாரென்று - நீங்கள் மரித்து விடுகின்றீர்கள். நீங்கள் தயாராக இருந்தாலும் இல்லாவிட்டாலும், உங்கள் வாழ்வு முடிந்து விடுகிறது.*

*நீங்கள் யாரேனும் ஒருவருக்கு உதவவேண்டும் என்று நோக்கம்*

கொண்டிருந்தால், அதை இப்போதே செய்ய வேண்டும் என்பதால் நான் இதைக் குறிப்பிடுகின்றேன். இந்த நாள் முடிவதற்கு முன் நீங்கள் இறந்துவிடக்கூடும். நான் உங்களைப் பயமுறுத்த முயற்சி செய்யவில்லை; நான் உண்மைகளை மட்டுமே எடுத்துரைக்கின்றேன்.

நான் ஐந்து சகோதரர்களைக் கொண்டிருந்தேன். நான் உயிருடன் இருக்கையில், அவர்களின் ஆத்துமாக்களைப் பற்றி நான் நினைக்காதிருந்தது என்பது நான் செய்தவற்றில் ஒன்றாக இருந்தது. நான் அவர்களை அவ்வப் போது சந்தித்தேன். சிலவேளைகளில் எங்கள் குடும்பங்கள் ஒன்றுகூடுவது உண்டு. இருப்பினும், அவர்களின் ஆவிக்குரிய நிலை பற்றி நான் ஒருக்காலும் அக்கறை கொண்டது இல்லை. பின்பு, நான் மரித்த பின்பு - அழிவுக்கு நியமிக்கப்பட்டவர்களின் வாதையை நான் அனுபவித்த பின்பு, அவர்களின் ஆயத்தக் குறைவான நிலையே என் சிந்தையில் மேலோங்கி நின்றது. அவர்களிடத்தில் திரும்பிச் செல்லும் ஏதாவது ஒரு வழியை நான் கெஞ்சி வேண்டினேன். “உங்கள் வாழ்வை மாற்றிக் கொள்ளுங்கள்!” என்ற ஒரே வரியை, அவர்களிடத்தில் நானோ அல்லது லாசருவோ அல்லது வேறு எவராவதுவோ அலறி உரைப்பதற்கு நான் எதை வேண்டுமென்றாலும் கொடுத்திருப்பேன்.

திரும்பிச் செல்வதற்கு வழியெதுவும் இருந்ததில்லை. உங்கள் உலகத்தில் மரித்தவர்களுடன் பேசக் கூடியவராகத் தம்மை யாரோ ஒருவர் உரிமை கோரிக்கொண்டதாக எனக்குக் கூறப்பட்டது. அவர்கள் ஒன்று பொய்ய ராகவோ அல்லது சுயவஞ்சனையாளராகவோ இருக்க வேண்டும். எனது சகோதரர்களுக்குச் செய்தியைக் கொண்டு சேர்க்க வழியெதுவும் இருந்த தில்லை. எனது வாய்ப்புக்கள் எல்லாம் கடந்து சென்றுவிட்டன. இவ்வித மாக எனது சகோதரர்கள் ஒருவர்பின் ஒருவராக மரித்தார்கள். அவர்கள் ஒருவர்பின் ஒருவராக இங்கு வந்து சேர்ந்தார்கள், நான் ஒரு காலத்தில் நேசித்த அவர்களின் கதறுதலும் புலம்புதலும் அலறுதலும் எவ்வளவு பயங்கரமாக இருக்கிறது!

உங்களுக்கு மிகவும் விசேஷித்தவராக இருக்கின்ற நபர் யார்? ஒரு உறவினர்? ஒரு நண்பர்? ஒரு அயலகத்தவர்? இப்போதே அவரிடத்தில் செல்லுங்கள். இப்போதே அவரிடத்தில் தேவனைப் பற்றியும் நித்தியத்தைப் பற்றியும் சொல்லுங்கள். தேவனுடைய சித்தத்தை அறிவதற்கு வேத வாக்கியங்கள் மட்டுமே ஒரே வழியாக உள்ளன என்று (நீண்ட காலத்திற்கு முன்பு ஆபிரகாம் என்னிடத்தில் விளக்கப்படுத்தியது போல்) அவருக்கு விளக்கப்படுத்துங்கள். பின்பு அவரை அல்லது அவளைப் பிதாவிடம் வருமாறு கூறுங்கள். நீங்கள் கெஞ்சுவதிலிருந்து கூச்ச உணர்வோ அல்லது மேட்டிமையான உணர்வோ உங்களைத் தடை செய்ய அனுமதிக்காதீர்கள். கெஞ்சுங்கள், வேண்டுகோள் விடுவியுங்கள், வற்புறுத்துங்கள், புத்திகூறுங் கள், விண்ணப்பியுங்கள் - ஏனென்றால் ஒரு ஆத்துமா இக்கட்டில் உள்ளது. ஒரு ஆத்துமா நித்தியத்தை வேறு எங்காவது செலவிடுவதாக உள்ளது.

எனது மரணத்திற்குப் பின்பு விரைவிலேயே, மேசியா சிலுவையில் மரித்தார் - அவரை நீங்கள் இயேசு என்று அழைக்கின்றீர்கள். அவர் மரணம் அடைந்த நிலையில் இருந்த மூன்று நாட்களின்போது அவரது ஆத்துமா

காணப்படாத இந்த வட்டாரத்தினுள் இருந்தது.[9] பெரும்பிளப்பிற்குக் குறுக்கே நான் அவரைக் காணமுடிந்தது மற்றும் இரட்சிக்கப்பட்டவர்களின் சந்தோஷ ஆரவாரத்தை நான் கேட்க முடிந்தது. அவர் ஒரு ஆச்சரியமான இரட்சகராக இருக்க வேண்டும். அவரைப் பற்றி நீங்கள் மக்களிடம் கூறினால், நிச்சயமாகவே பலர் பதில்செயல் செய்யத் தயாராக இருப்பார் கள். அவர்கள் அவ்வாறு செய்யாமல் போனாலும், உங்களால் செய்ய முடிந்ததை நீங்கள் செய்துள்ளதை அறிவீர்கள்.

**இப்போதே உங்களைக் குறித்து அக்கறை கொள்ளுங்கள்**

மற்றவர்களைக் குறித்து உண்மையிலேயே நீங்கள் அக்கறைகொள்ள முடிவதற்கு முன்பு, முதலில் நீங்கள் உங்களைக் குறித்து அக்கறை கொண்ட வர்களாய் இருக்க வேண்டும். இங்குள்ள ஒவ்வொருவரும் விடுதலைக்காக - ஏதாவது ஒரு விடுதலைக்காக - நிலையாகக் கதறுகின்றார்கள். அதே வேளையில், மரணத்திற்குப் பின்பு கிடைக்கும் அந்த விடுதலையானது மரணத்திற்கு முன்பே பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை நாங்கள் அறிந்துள்ளோம். அப்போது எங்களுக்கு வாய்ப்பு இருந்தது.

நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசனங்களிலும் முன்னுரைக்கப்பட்ட ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிக்கும்படி கிருபையின் காலத்தில் வாழ்தல் என்பது எவ்வளவு அற்புதமானதாக இருக்க வேண்டும்! இயேசுவின் பலியில் நம்பிக்கை வைத்து, இயேசுவிடம் திரும்பி, அவருடன் ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்படுதல் (முழுக்காட்டப்படுதல்) என்பதே இந்தக் கடைசி காலத்தில் இரட்சிப்புக்கான நிபந்தனைகளாக உள்ளன என்று எனக்குக் கூறப்பட்டுள்ளது.[10] விலகிச் சென்றுள்ளவர்கள் மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஜெபம் ஆகியவற்றின் மூலம் அவருக்குள் திரும்ப வருமாறு கூறப்படுகின்றனர்.[11] இது எனக்கு எளிமையானதாக ஒலிக்கிறது; இந்த விஷயங்களை செய்வதற்கு எவரொரு வரும் மறுக்கக்கூடுவது எப்படி என்பதை என்னால் காண இயலவில்லை. நான் என்னைப் பற்றி மறந்து விட்டேனே: நான் எனது சொந்த வாய்ப்பைத் தவற விட்டு விட்டேன், எனவே இப்படிப்பட்ட ஒரு துன்பநிலை ஏற்படக்கூடும் என்பது தெளிவு.

என்றென்றும் இதுவே விஷயமாக இருக்க வேண்டுமா? நிச்சயமாகவே வாழ்வு என்பது எதைப்பற்றியது என்று மக்கள் அறிந்தால், மரணத்திரைக் குப் பின் என்ன கிடக்கிறது என்பதை அவர்கள் அறிந்தால், நிச்சயமாகவே அவர்கள் தங்கள் வாழ்வை மறுபரிசீலனை செய்து அதில் உள்ள தேவை களைக் கண்டு, அந்தத் தேவைகளைக் குறித்துக் கவனம் செலுத்துவார்கள். ஆகையால், எனது வரலாற்றை தொலைவாகவும் விரிவாகவும் கூறுங்கள். நீங்கள் சந்திக்கின்ற ஒவ்வொருவருக்கும் இந்த சத்தியங்களைச் சொல்லுங் கள். உங்கள் சக்தியைக் கொண்டு முடிகிறவரைக்கும் அவர்களுக்குச் சொல்லுங்கள், ஏனெனில் ஆத்துமாக்களின் இரட்சிப்போ அல்லது பேரழிவோ உங்கள் தோள்களின்மீதே சுமந்துள்ளது. இவற்றைக் கூறுவதி னால், ஒரு ஆத்துமாவாவது தேவனிடத்தில் கிட்டிச் சேர்ந்தால் அல்லது கர்த்தரின் இரட்சிப்பை ஏற்றுக்கொண்டால், எனது வேதனை முற்றிலுமாக வீணாகப் போகாது.

*இருப்பினும், உங்கள் சொந்த இரட்சிப்பை முதலில் கவனியுங்கள். என் நண்பரே, நான் செல்லவிருக்கும் இடத்தில் நீங்கள் நித்தியத்தைச் கழிப்பதை நான் விரும்பவில்லை.*

*என்றென்றைக்கும் பிரிவு சொல்லுகிறேன்*
*(இவ்வாறு நான் நம்புகின்றேன்)*
*நீங்கள் என்னை அறிந்துள்ளபடி:*
***லூக்கா 16ல் இருந்து பணக்கார மனிதன்***

## குறிப்புகள்

*இது, கைப்பிரதி வடிவில் வெளியிடப்பட்ட ஒரு எடுத்துரைப்புப் பிரசங்கத்தின் மறுபார்வையாக உள்ளது. மூலக்கைப்பிரதியை* Haun Publishing Co., Box 3426, Pasadena, TX 77501 *என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இந்த மறுபார்வைப் பாடம்* Haun Publishing *அவர்களின் அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. பணக்கார மனிதரிடமிருந்து வந்ததாக ஒரு கடிதத்தைப் பிரசங்கியார் ஒருவர் வாசித்தார் என்று பல ஆண்டுகளுக்கு முன்பு எனக்குக் கூறப்பட்டது. அந்தப் பிரசங்கியாரின் கடிதத்தில் என்ன கூறப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது, ஆனால் அந்த நிகழ்ச்சியே எனது " 'நரகத்தில்' இருந்து ஒரு கடிதம்" என்ற இந்த எடுத்துரைப்புக்கு ஏவுதலாக இருந்தது.*

*நான் இதை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தும்போது, இந்த எடுத்துரைப்புக்கு முன்பு, யாராவது ஒருவரை லூக்கா 16:19-31 வசனப் பகுதியை வாசிக்கச் செய்வேன். நான் எழுந்து நிற்கும்போது, இந்தப் பணக் கார மனிதர் தமது சகோதரர்களுடன் செய்தித் தொடர்பு கொள்வதற்கு அனுமதிக்கப்படவில்லை என்பதை, எனது உரையைக் கேட்பவர்களுக்கு நினைவூட்டுவேன். பின்பு நான், ''அவர்களுடன் செய்தித் தொடர்பு கொள்வதற்கு அவர் அனுமதிக்கப்பட்டிருந்தால் என்னவாகியிருக்கும்? அவருடைய செய்தி என்னவாக இருந்திருக்கும்? இன்றைய நாளில் நம்முடன் செய்தித் தொடர்பு கொள்வதற்கு அவர் அனுமதிக்கப்பட்டால் என்னவாகும்? நாம் எவற்றை அறிந்துகொள்ள வேண்டும் என்று அவர் விரும்புவார்? இன்று, லூக்கா 16ன் வல்லமை நிறைந்த செய்திகளை அறிவிக்கும் ஒரு வழிமுறையாக, இந்தப் பணக்கார மனிதர் உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதியதாக நீங்கள் கற்பனை செய்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்" என்று கூறுவேன். பின்பு நான், "இந்தியாவில் உள்ள ஒரு நண்பருக்கு" என்ற முகவரியிடப்பட்ட ஒரு நீளமான தபால் உறையை எடுத்து வைப்பேன். அதன் இடது புற மேல் மூலையில், ''பணக்கார மனிதன், காணப்படாத வட்டாரம்'' என்று எழுதப் பட்டிருக்கும். அந்த உரையில் இருந்து இந்தப் பிரசங்கம் அடங்கிய பிரதியை எடுத்து நான் வாசிக்கத் தொடங்குவேன்.*

*இந்தப் பாடத்தின் அடிக்குறிப்புகள் பணக்கார மனிதரின் கடிதத்தை*

*நான் வாசிக்கையில் உட்செருகிய விளக்கங்களாக உள்ளன. நான் சற்று நிறுத்தி, கண்ணோக்கி, விளக்கம் தந்து, பின்பு வாசிப்பை மீண்டும் தொடருவேன்.*

*உங்களுக்கும் நீங்கள் பிரசங்கிக்கின்ற மக்களுக்கும் இந்த அணுகுமுறை ஏற்றதாக உள்ளதா? அதை நீங்கள் மட்டுமே கூறமுடியும்.*

---

*குறிப்புகள்*

*[1]பணக்கார மனிதன் 1 சாமுவேல் 16:7ஐக் குறிப்பிடுகின்றார் என்பது உறுதி. [2]அவர் மத்தேயு 25:31-46ஐ மனதில் கொண்டிருக்கலாம். [3]இந்த மூன்று கிரேக்க வார்த்தைகள் பின்வருமாறு: gehenna (கெஹென்னா) (இது பொல்லாதவர்களின் கடைசி இல்லிடத்தைக் குறிக்கிறது - இது "அக்கினிக் கடல்" என்பதாகும்), Hades (ஹேடிஸ்) (இது "காணப்படாத உலகம்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது, இது நல்லவர்களோ அல்லது தீயவர்களோ, எல்லாரும் நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருக்கும் நிலையைக் குறிக்கிறது), மற்றும் tartarus (டார்ட்டாரஸ்) (நியாயத்தீர்ப்புக்காகப் பொல்லாதவர்கள் காத்திருக்கும் இடமான காணப்படாத உலகத்தில் உள்ள ஒரு பகுதியைக் குறிக்கிறது). முதலாவது பற்றி மத்தேயு 23:33ஐக் காணவும்; இரண்டாவதைப் பற்றி அப். 2:31ஐக் காணவும்; மூன்றாவதைப் பற்றி 2 பேதுரு 2:4ஐக் காணவும். [4]இது* King James *அல்லது* Authorized Version *என்ற வேதாகமங்களை மட்டுமே குறிக்கக்கூடும். [5]லூக்கா16:23ம் வசனத்தில்,* KJV*யில்* "hell" *என்றுள்ளது, அதே வேளையில்* NASB*யானது,* "Hades" *என்பதைப் பயன்படுத்துகிறது. [6]ஆபிரகாமிலிருந்து வந்த இந்த மேற்கோளானது லூக்கா 16:26ல் சரிபார்க்கப்பட முடியும். [7]ஒருவேளை, பணக்கார மனிதர் ஏசாயா 59:1, 2 மற்றும் இதுபோன்ற வசனங்களைக் குறிப்பிடலாம். [8]யாரோ ஒருவர் பக்க ஓரத்தில் பின்வரும் வசனக்குறிப்புகளைக் கூட்டியுள்ளார்: மத்தேயு 25:46; மாற்கு 9:44; வெளிப்படுத்தின விசேஷம் 14:11. [9]இது அப். 2:31உடன் ஒத்துப்போகிறது.* (KJV*யில்* "hell" *(நரகம்) என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை* "Hades" *என்பதாகவே உள்ளது.) [10]பணக்கார மனிதர் புதிய ஏற்பாட்டுடன் தனக்குக் குறிப்பிடத்தக்க வகையில் பழக்கம் இருப்பதைக் காண்பிக்கின்றார். இது, மாற்கு 16:16, அப். 2:38 மற்றும் ரோமர் 6:3-7 போன்ற வசனப்பகுதிகளின் நல்லதொரு தொகுப்புரையாக இருக்கிறது.*

*[11]இந்தக் கூற்று, அப். 8:22, 23, யாக்கோபு 5:16 மற்றும் 1 யோவான் 1:9 ஆகியவற்றின் நல்லதொரு தொகுப்புரையாக உள்ளது.*